**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2015**

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சான தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைத்துநிற்கவல்ல விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 100 மில்லியன் அல்லது ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69.10 மில்லியன் ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூன் 23 ஆந் திகதிய 4429-சீஈ ஆம் இலக்க முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ஐ.அ.டொலர் 98.1 மில்லியன் அல்லது ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59.60 மில்லியன் ஆன மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2011 மார்ச் 15 இல் 4906-சீஈ ஆம் இலக்க இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் மீது ஐ.அ.டொலர் 100 மில்லியன் அல்லது ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63.6 மில்லியன் ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலமானது இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள

தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்றும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) அபிவிருத்தி கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 244.23 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வரிசை அமைச்சு மற்றும் வீதி பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியம் போன்ற முகவர்களிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 154.12 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சிவில் வேலைகள் பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமல் செயற்திட்டத்தின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கடன் வசதியின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 7.64 மில்லியன் தொகையான முற்பணம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பதவியணி தொடர்பில் ரூபா 588,254 தொகை ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 962,749 தொகையான மேந்தலைச் செலவினம் என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| *மூலம்* | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2015 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2015 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | *ஐ.அ.டொ மில்லியன்* | *ரூபா மில்லியன்* | *ஐ.அ.டொ மில்லியன்* | *ஐ.அ.டொ மில்லியன்* | ரூபா மில்லியன் | *ஐ.அ.டொ மில்லியன்* | ரூபா மில்லியன் |
| சர்தேச அபிவிருத்திச் சங்க கடன் | | | | | | | |
| 4138 சீஈ | 100.00 | 10,125 | - | - | - | 68.37 | 9,709 |
| 4429 சீஈ | 98.10 | 11,579 | - | - | - | 76.84 | 10,912 |
| 4906 சீஈ | 100.00 | 11,081 | 4,177 | 7.60 | 1,210 | 63.65 | 9,569 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 241 | 1.70 | 241 | 49.00 | 7,012 |
| | 298.10 | 32,785 | 4,418 | 9.30 | 1,451 | 257.86 | 37,202 |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

பேலியகொட – புத்தளம் வீதி மற்றும் கொழும்பு – காலி - ஹம்பாந்தோட்டை வீதியின் 04 பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் பாணந்துறை நகரத்திலுள்ள மேம்பாலத்தின் நிர்மாண வேலைகள் மேலதிக நிதியளிப்பு ஒழுங்கமைப்பின் கீழ் 2015 யூன் 30 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பூர்த்தி செய்ய எதிர்பார்த்த திகதியிலிருந்து 56 நாட்கள் தொடக்கம் 359 நாட்கள் வரையிலான வீச்சுக் காலதாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேலியகொட – யாஎல வின் வீதிப் பிரிவின் புனரமைப்பில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களின் பிரகாரம், பல நிபந்தனைகளின் கீழ் ஒப்பந்தக்காரர்களால் பொதிகள் 03 மற்றும் 04 இன் கீழ் முறையே ரூபா 278.37 மில்லியன் மற்றும் ரூபா 250.10 மில்லியன் கழிவுகள் வழங்கப்பட்டன. எனினும், ஒப்பந்த உடன்படிக்கையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மீதான மந்தமான புரிந்துணர்வுகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள் காரணமாக செயற்திட்ட இறுதிக்காலப்பகுதியில் முறையே ரூபா 40.29 மில்லியன் மற்றும் ரூபா 33.36 மில்லியன் கழிவுகள் மாத்திரமே செயற்திட்டத்தால் கோர முடிந்திருந்தது.

(ஆ) தேசிய வீதிகளின் புனரமைப்பு மீதான அளவீட்டுப்பட்டியலானது நகரப்பகுதிகளிலுள்ள நிலக்கீழ் பயன்பாடுகள் மீதான அளவைகளை உள்ளடக்கும் புனரமைப்பு வேலைகளுக்கான பொருத்தமான ஒட்டுமொத்த முக்கிய காரணிகளையும் கருத்திற்கொண்ட பின்னர் யதாரத்தமானதாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அளவீட்டுப்பட்டியலில் புதிய உருப்படிகளை அறிமுகப்படும் அதேநேரம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த சில உருப்படிகள் அகற்றப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், புனரமைப்பு வேலைகள் மீது மதிப்பிப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 1,052 மில்லியன் மேலதிக கிரயங்கள் ஏற்படுத்த வேண்டியிருந்தது.

(இ) கொழும்பு – காலி - ஹம்பாந்தோட்டை வீதி மற்றும் பேலியகொட – புத்தளம் வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கலில் ஏற்பட்ட காலதாமதங்களின் மீது ரூபா 485.4 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டணங்களை செயற்திட்டம் விதித்திருந்தது. எனினும், வீதிப்புனரமைப்பு வேலைகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தாமதங்களால் அதன் மீது ஏற்பட்ட பயனற்றிருந்த வளங்கள் இலாபத்தின் இழப்பு மற்றும் மேந்தலை செலவினங்கள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு ரூபா 942.5 மில்லியன் கூட்டுத்தொகையான நீடித்துவைத்தல் கிரயங்களை ஒப்பந்தக்காரர்கள் கோரியிருந்தனர். மேலும், போதிய வளங்கள் ஈடுபடுத்தப்படாமை மற்றும் இயந்திரங்களில் அடிக்கடி கோளாறுகள் ஏற்பட்டமை போன்ற ஒப்பந்தக்காரர்களின் குறைபாடுகளால். வேலைகளின் பூர்த்தியாக்கலில் தாமதங்கள் ஏற்பட்டது என மதியுரைஞரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவானது நீடித்துவைப்பதற்கான கிரயத்திற்கு பதிலாக தாமதக்கட்டணங்களை அறவிடாது இருப்பதற்கு தீர்மானித்திருந்தது.

(ஈ) வீதிப் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்களின் விளைவால் ஆலோசனை ஒப்பந்தத்தின் காலப்பகுதி 14 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 1.08 மில்லியன் மற்றும் ரூபா 251.99 மில்லியன் ஆலோசனைக் கட்டணங்கள் ஐ.அ.டொலர் 1.40 மில்லியன் மற்றும் ரூபா 412 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

**3.4 வழமைக்குமாறான நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 02 உத்தியோகத்தர்களுக்கு 2015 நவம்பரில் 10 நாட்களுக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தில் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு செயற்திட்டமானது நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் ரூபா 2 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிதி அமைச்சின் 2015 மார்ச் 15 இன் எம்எவ்/01/2015/01 ஆம் இலக்க சுற்றிக்கையில் வேண்டப்பட்டவாறு வெளிநாட்டு சுற்றுலா தொடர்பாக நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த பயிற்சி செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புனரமைக்கப்பட்ட வீதிகளின் தெருவிளக்குகள் மற்றும் பாணந்துறை நகரத்திலுள்ள மேம்பாலத்தில் பொருத்தப்பட்ட மின்பாரம்தூக்கி என்பவற்றிற்கு ஏற்பட்ட மின்சார கட்டணங்களையும் பராமரிப்பு கிரயங்களையும் தீர்ப்பனவு செய்வதற்கு முறையான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் பேலியகொட - புத்தளம் வீதியின் பேலியகொடவிலிருந்து யாஎல வரையான வீதிப்பிரிவிற்காக ரூபா 3.46 மில்லியன் மின்சாரக்கட்டணங்களை செலவழித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், பாணந்துறை நகரத்தின் மேம்பாலத்தில் பொருத்தப்பட்ட மின்பாரம்தூக்கியின் ரூபா 95,815 மின்சார கட்டணங்கள் மீளாய்வாண்டின் யூன் மற்றும் யூலை மாதங்களிற்காக செயற்திட்டத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களின் செயற்பாடுகளுக்காக தேவையான பொருட்கள் உரிய தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளிற்காக ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களினூடாக ரூபா 14.79 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 7.70 மில்லியன் பெறுமதியான பொருட்கள் முரண்கட்டளைகளினூடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட பீவீசி குழாய்களின் இருப்புக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பொருட்கள் நீர்கொழும்பிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களஞ்சியங்களில் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) வழமையாக, செயற்திட்டமானது சொத்துக்களை வீதிப் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவால், தேசிய வீதிப் பிரிவுகளில் ரூபா 284 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த குழாயிடல் வேலைகள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடாத மீளாய்வாண்டின் போது நடைபெற்ற பல்வேறு விழாக்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் செயற்திட்டத்தால் ரூபா 5.55 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**3.5 நிதிகளின் மீளளிப்பு தொடர்பான சர்ச்சைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி 27 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6.2 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 47,329.56 பற்றுதலுக்கான விண்ணப்பம் போதிய தகவல் மற்றும் மூல ஆவணங்கள் இன்மையால் கடனளிக்கும் முகவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அனைத்து மூன்று கடன் உடன்படிக்கைகளின் கீழுள்ள எஸ்டிஆர் 8,956,010 ஒதுக்கீடுகள் செயற்திட்டத்தின் இறுதிக்காலப்பகுதியின் போது பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கடனளிக்கும் முகவரால் பின்னர் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. ஆகையால், 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறிருந்த ரூபா 322,434,137 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 2,303,416.93 மீதிகள் கடனளிக்கும் முகவரிற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

**3.6 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்தல் மீதான சர்ச்சைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 யூன் 30 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 செப்தெம்பர் 30 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை 2015 திசெம்பர் 31 இலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அறிக்கை தயாரித்தலுக்காக ரூபா 2.57 மில்லியன் மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 யூன் 30 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அமுலாக்கல் முகவருக்கு சொத்துக்களை கையளிப்பதற்கும் கணக்குகளை முடிவுறுத்துவதற்கும் செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.